# கிறிஸ்துவுக்கு புகழ்

அன்பின் வாசக நெஞ்சங்களே!

மடுத்திருப்பதியை நினைவுபடுத்தி மருதமடு மாதாவின் பெருநாளை ஆவணி 15ம் திகதி எமது தாயகத்தில் கொண்டாடப்படுகின்றது. தமிழ் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தின் அடையாளமாக இருக்கும் இத்திருப்பதி இன, மத, மொழி, நிற, வேறுபாடு இல்லாமல் எல்லோராலும் நேசிக்கப்படுபவரும், அன்பு செய்யப்படுபவரும் எம் மரியன்னை ஆகும். மரியன்னையின் புகழ் பாரெங்கிலும் பரப்பப்படுவதிலும், அன்னையின் பரிந்துரை எல்லோருக்கும் கிடைக்கும் வரப்பிரசாதமாக இருக்கின்றது. ஆவணி மாதத்தை நினைவுகூரும் பொழுது மருதமடு அன்னையை மறக்க முடியாது. அடுத்ததாக எம் நற்செய்தி அறிவிப்புப்பணி எப்போதும் சிறந்ததாகவும், மிகவும் உறுதியானதாகவும் இருக்கவேண்டும். ஆரம்ப திருச்சபை வரலாற்றிலே இந்த நற்செய்தி அறிவுப்பு வெறும் கொள்கைகளிலும், சட்ட ஒழுங்குகளிலும், நிர்வாக அமைப்புக்களிலும்தான் இருந்ததை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் விபரமாக பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. திருச்சபை மையக் கோட்பாடாகத் தான் இருந்தது. முக்கியமாக, திருச்சபையின் ஆட்சிப்பீடத்தையும், வழிபாடுகளையும், சட்ட ஒழுங்குகளையுந்தான் முக்கியப்படுத்தி, உள்ளார்ந்த விடயத்தை விட்டு விட்டதாக இரண்டாம் வத்திக்கான் சங்கம் உணர்ந்து மிகவும் முக்கியமான மாற்றங்களை திருச்சபை கொண்டு வந்ததை நாம் எல்லோரும் அறிவோம். மக்கள் மையக்கோட்பாட்டை முக்கியத்துவப்படுத்தி இறைவனின் அன்பையும், பேரிரக்கத்தையும் உள்ளார்ந்த விடயமாக்கொண்டு பல கட்டங்களில், பல முறைகளில் மாற்றங்களை கொண்டு வந்தது. இதன் அடிப்படையில் நற்செய்தி அறிவுப்பணியிலும் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதாவது ஷஷநற்செய்தி” இறைவனின் செய்தி. அதை அறிவிப்பவர்கள் திருமுழுக்குப் பெற்ற சிறு குழந்தைகளில் இருந்து முதியவர்கள் வரையும் இந்தப் பணியை அடிப்படையில் முக்கியமாக ஏற்றிருக்கின்றார்கள். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவுப்பணியில் வேண்டுமென்பதுதான் திருச்சபையின் எதிர்பாப்பு. நற்செய்தியில் மட்டுமல்ல அறிவிப்பாளர்களிலும் முக்கியமான விடயங்கள் தங்கியிருக்கின்றது என்று இரண்டாம் வத்திக்கான்சங்க ஏட்டில் ஷஷநற்செய்தி அறிவிப்பு” என்ற பகுதி மிகத்தெளிவாக கூறுகின்றது. ஷஷதூய பவுல் அடிகளார் கூறுகின்றார் ஷஷநற்செய்தியைக் கொண்டு செல்பவர்கள், இறைவனின் செல்வங்கள் அவற்றை தாங்கிச் செல்பவர்கள் இறைவனின் பணியாளர்கள். பணியாளர்கள் என்று குறிப்பிடும் பொழுது ஆயர்கள், குருக்கள், துறவிகள், கன்னியர்கள் மட்டுமல்ல திருமுழுக்குப் பெற்ற எல்லோரையுந்தான் குறிப்பிடுகின்றது. முக்கியமான பணிப்பொறுப்பிலிருந்து பணிசெய்கிறவர்கள் எல்லோரும் இறைமகன் இயேசுவின் ஊழியர்கள். இவர்கள் எல்லோரும் இயேசுவின் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். இவர்கள் மட்டில் பொறுப்புணர்வு, ஆர்வம், பற்றுறுதி மிகவும் முக்கியமாக இருக்க வேண்டும். குறிப்பாக சிறப்பான வாழ்க்கைமுறை, எளிமையான, தூய்மையான வாழ்க்கைமுறை இருக்க வேண்டும். இவை உண்மையாகவே நற்செய்தி அறிவுப்புப் பணியை இன்னும் வேகப்படுத்தும், உறவு முறை, ஏனையவர்களோடு உறவாடும் முறை, உறவாடும் தன்மைகள், பேச்சு, புன்முறுவல், கவனிப்புத்தன்மை இவை இன்னும் நற்செய்தி அறிவிப்பிக்கிற்கு உந்துதலைக் கொடுக்கும். “தந்தை இரக்கம் உள்ளவராக இருப்பது போன்று நீங்களும் இரக்கமுள்ளவராக இருக்க வேண்டும்” என்று இயேசு கற்பித்துக் கொடுக்கின்றார். இரக்கம், பரிவு, விசுவாசம், பிளவுபடாத தன்மை, பிரித்து ஒருமையைக் கட்டிக்காத்தல் என்பது மிகவும் முக்கியம். எனவே நற்செய்திப்பணி என்பது எமது முழு ஆளுமையிலும், மனித மாண்பிலும் மிகவும் முக்கியமாக தங்கியிருப்பதை காணக்கூடியாதாக உள்ளது. எம் ஒவ்வொருவருடைய ஆளுமையிலும் இயேசுவின் ஆளுமை பிரதிபலிக்க வேண்டும். முழுவதிலும் இயேசுவுடைய பேச்சு, மூச்சு, சொல், செயல் இருக்க வேண்டும். எல்லாவற்றிலும் இயேசுவின் செயல் பிரதிபலிக்க வேண்டும். மொத்தத்தில் நாம் எல்லோரும் இயேசுவுக்காக முழுமையாக எம்முடைய சுயநலன்களை மாற்றி இயேசுவாக மாறி நற்செய்தி தூதுவர்களாக மாற முயற்சி எடுப்போம்.

**நன்றி**

**அன்புடன்,**

**அருட்பணி யூட் நிக்ஸன்**

**Parish Priest**

**Our Lady of Deliverance Tamil Catholic Mission**

**Montreal (QC), Canada.**